பாடம் 4

மேலங்கியைக் கொண்டுவா

எப்போதாவது உன் வீட்டிலிருந்து மிகவும் தூரமாகத் தனியாக நீ சென்றிருக்கிறாயா? சுற்றுலாவுக்கோ, அல்லது உறவினர் வீட்டிற்கோ அவ்வாறு பெற்றோரைப் பிரிந்து சென்றதுண்டா?

நான்கு சுற்றுச்சுவருக்கு மத்தியிலே பவுல் சிறைப்படுத்தப் பட்டு கல்தரையில் உட்கார்ந்திருந்தார். தரை சில்லென்றிருந்தது. பவுலின் கால்கள் சங்கிலியினால் கட்டப்பட்டிருந்தது. அந்த அறையில் மிகச் சிறியஒரு சன்னல்மட்டுமே இருந்தது. அந்தச் சன்னலின் வழியேவந்த வெளிச்சம் மிகவும் குறைவாக இருந்தது.

எனவே அறை இருட்டாகவே இருந்தது. குளிராகவும் இருந்தது. ஏதேனும் ஒரு பயங்கரமான மிருகத்தைக் கட்டி



வைப்பதுபோல் அவரைக்கட்டி வைத்திருந்தார்கள். அவர் ஒன்றும் பயங்கரமான மிருகம் அல்ல. பவுல் தேவனுடைய உண்மையான ஒரு ஊழியக்காரர்.

ஆரம்பக்காலங்களில் பவுல் இயேசுவை அறியாதிருந்தார். அவர் இயேசு கிறிஸ்துவைத் தெய்வமென்று கூறிய எல்லாரையும் வேதனைப்படுத்திக் கொண்டிருந்தவர். ஸ்தேவான் என்பவரைக் கொலை செய்தபோது, அவருடைய ஆடைகளை இந்தப் பவுலின் பாதத்தில்தான் வைத்தனர். பவுல் முன்பு சவுல் என்று அழைக்கப்பட்டார்.

ஆனால், பவுலை தேவன் மாற்றினார். இயேசுவைப் பவுல் ஏற்றுக்கொண்ட பின் இயேசுவுக்காக வாழும் ஒரு வல்லமையுள்ள ஊழியக்காரனாக மாறிவிட்டார்.

அச்சமயத்தில்,ரோமப் பேரரசன் நீரோ கிறிஸ்தவர்களுக்கு விரோதமாயிருந்தான். அநேக கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். பவுலையும் கொல்வதற்காகத்தான் சிறைப்படுத்தியிருந்தார்கள்.

மன வசனம்

உங்கள் கிரியையையும்... அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே. எபிரெயர் 6:10.

இப்போது பவுல் தன்னுடைய இளம் நண்பன் தீமோத்தேயுவை நினைத்துப் பார்த்தார். தீமோத்தேயு பவுலுக்கு மகன்போன்றவன். கடந்தமுறை தீமோத்தேயுவைப் பிரிந்து ஊழியத்திற்காக வந்தபோது கதறி அழுதான்.

குழந்தைப்பருவத்திலிருந்தே தீமோத்தேயுவை, பவுலுக்கு நன்கு தெரியும். இயேசுவைப் பற்றி அவனுக்கு வீட்டில் நன்றாகச் சொல்லிக்கொடுத்திருந்தார்கள்.

பவுலுடன் தீமோத்தேயுவும் அடிக்கடி ஊழியத்திற்குச் சென்றிருக்கிறான். இருவரும் சேர்ந்து மற்ற கிறிஸ்தவர்களிடத்தில் தைரியமாக இயேசுவைப்பற்றிப் பிரசங்கித்திருக்கிறார்கள்; உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறு போதிப்பதற்காக பலமுறை பவுல் சிறைத்தண்டனைகளை அனுபவித்ததும் உண்டு. இப்போது அவருக்கு வயதாகி இருந்தது. மழையையும் குளிரையும் அவரால் தாங்கமுடியவில்லை. ரோமப் பேரரசன் கொல்லுவதற்கு முன்னர் குளிரினாலேயே அவர் செத்துவிடுவார் போலிருந்தது.

பவுல் தனது பேனாவை எடுத்தார். தீமோத்தேயுவுக்கு கடிதம் எழுதத்தொடங்கினார். "என் அன்பு மகனே, தீமோத்தேயுவே! நான் இக்கடிதத்தை மிகுந்த அன்புடன் எழுதுகிறேன். இரவும் பகலும் இடைவிடாமல், என் ஜெபங்களில் நான் உன்னை நினைக்கிறேன்; உன் கண்ணீரை ஞாபகம் பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படும்படிக்கு உன்னைக் காண வாஞ்சையாயிருக்கிறேன்.

இயேசு மரணத்தை அழித்தார் என்பதை தீமோத்தேயுவுக்குப் பவுல் நினைவூட்டினார். தேவனுடைய பிள்ளைகள் சந்தோஷப்படும்படிக்கு,



செய்தி

தேவனுக்குப் பணிபுரியும் பிள்ளைகளுக்கு நான் உதவும்போது நான் தேவனுக்குச் சேவை செய்கிறேன்.

யாவருக்கும் இந்த நற்செய்தியைச் சொல்ல, பவுல் ஒரு போதும் வெட்கியதோ தயங்கியதோ இல்லை. இயேசுவின் நற்செய்தியைச் சொல்ல, பவுல் மிகுந்த ஆசையாயிருந்தார். பவுல் தனிமையில் வாடினார்.

ஒரு சிலர் மட்டும்தான் அவரைச் சந்தித்து உற்சாகமூட்டிச் சென்றனர். அத்தகையவர்களைப் பவுல் பட்டியலிட்டு வைத்திருந்தார். அத்தகையோருக்குத் தன்னுடைய வாழ்த்துதலைச் சொல்லும்படி, பவுல் தீமோத்தேயுவைக் கேட்டுக் கொண்டார்; குளிர்காலத்திற்கு முன்னரே வரும்படியும், அவ்வாறு வரும்போது தன்னுடைய மேலங்கியைக் கொண்டுவருமாறும் எழுதினார்.

செல்லமே, போதகர்கள்கூட இவ்வாறு தனிமையில் வாடுவது உண்டு. அத்தகையோர் மகிழ நீ என்ன செய்யப்போகிறாய்?

செய்முறை: நீங்கள் உங்கள் போதகருக்கு எவ்வாறு உதவலாம்? ஜெபி, உதவு, ஊக்குவி, சிரி, சேவைசெய், கவனி ஆகிய வார்த்தைகள் கீழே ஒழிந்து கிடக்கின்றன; அவற்றைக் கண்டுபிடித்து வட்டமிடு.



செ	வ	ம	எ	ப	கா	ய்	ஜ
ஜ	ல	ந	வ்	ர	ச	கா	ஐ
பி	ர	ட	தே	செ	ட்	யா	ஷ
ர	ப	க	வ	னி	ட	லி	ரி
ப	தே	ன	ஊ	பூ	ன்	வ	சி
பு	ச	க	வா	க்	ட்	க்	ஸ
தே	ஒ	ச	டி	ம்	கு	மே	ன
ஹ	தே	உ	த	வு	ரீ	வி	ம